[1989 அக்டோபர் 31

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை.

* 3122. **திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியகுளம் பகுதியில் மாம்பழத்தைப் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏராளமான மாம்பழம் விளைகிறது. அந்தப் பகுதியில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. பெரியகுளம் பகுதியில் அந்தத் தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான மாம்பழ உற்பத்தி போதுமான அளவிற்கு இருக்கிறது என்று ஆராய்ந்து முடிவெடுத்ததற்குப் பிறகு வேண்டுமானால் உறுப்பினருடைய கோரிக்கையை அரசு தீர்க்கும்.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏராளமான மாம்பழம் விளைவிக்கப்படுகிறது. விளைவிக்கப்படுகிற அந்த மாம்பழங்களை, பெங்களூர், இந்தூர், நாக்பூர், பம்பாய் போன்ற வெளியூர்களுக்குச் சென்று விற்க வேண்டிய நிலை இருக்கிறது. வெளியூர்களுக்கு மாம்பழங்களை அனுப்புவதால் அதிகச் செலவு ஏற்பட்டு விவசாயிகளுக்குக்

1989 அக்டோபர் 31]

கட்டுபடியாகாத விலை கிடைத்து பெருத்த நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, இந்த அரசு மாம்பழ உற்பத்தியைப் பெரிதும் நம்பியிருக்கும் பெரியகுளம் விவசாயிகள் பயனடையும் வகையில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலையை அமைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, அரசு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

(9-55)

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பெரியகுளம் பகுதியைப் போலவே எங்களுடைய பழனி பகுதியிலும் மாம்பழம், கொய்யாப்பழம் மிக அதிக அளவில், தினமும் நூற்றுக்கணக்கான லோடுகள் வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆகவே, அங்கும் ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்கனவே இருந்த அரசு ஆய்வெல்லாம் நடத்தியது. பின்னால் அது கைவிடப்பட்டது. இந்த அரசு மறுபரிசீலனை செய்து பழனி தொகுதியில் குறிப்பாக ஆயக்குடி பகுதியிலே ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அரசு ஏற்கெனவே இது பற்றி பரிசீலனை செய்து, கைவிட்டுவிட்டது என்று சொன்னார்கள். எந்த அடிப்படையில் அந்தத் திட்டத்தைக் கைவிட்டார்கள் என்பதை அறிந்து, அதற்கேற்ப இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பழம் பதனிடும் தொழிற்சாலைகளை அமைக்க புதிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதன் மூலம் இந்தத் தொழிற்சாலைகளை அமைக்க முடியுமா என்ற ஒரு ஆலோசனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசு அதுபற்றி பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தருமபுரி, மதுரை மாவட்டங்களில் 'சீசனிங்

பர்ச்சஸ்' என்ற முறையில் மாம்பழம், இதர பழ வர்க்கங்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஒரு மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் ஏற்கெனவே பரிசிலிக்கப்பட்டு இருப்பதாக குறிப்பு இருக்கிறது. அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து, விவசாயிகளும் தமிழக மக்களும் பயன்பெறும் அளவுக்கு, அமைத்துச் செயல்படுத்துகின்ற திட்டத்தை தற்போது அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவரவர்களே, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் நெகமத்தில் ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. மேற்கொண்டு தொழிற்சாலை தேவைப்படுமா என்பதை ஆராய்ந்து அரசு நிச்சயமாக இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைக்க முன்வரும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்போல தக்காளியும் பயிரிட்டு, மார்க்கெட்டில் உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் பெருமளவுக்கு நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, தக்காளி பதனிடும் அல்லது சாறு பிழியும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. தொடர்ந்து முயற்சி செய்து அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழம் என்பது ஆண்டுக்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும் விளைகின்ற பழம். ஆனால் தக்காளி என்பது ஆண்டு முழுவதும் விளைந்து ஆண்டு முழுவதும் பொதுமக்களுக்குப் பயன்படும் ஒரு காய்கறி வகை. ஆகவே, அதைப் பதப்படுத்த வேண்டிய அவசியம் தமிழ் நாட்டில் தேவை இல்லை என்று கருதுகிறேன். தருமபுரி, ஓசூர் போன்ற பகுதிகளில் ஏராளமாக உற்பத்தியாகின்ற தக்காளி உடனுக்குடன் மார்க்கெட்டில் விற்பனையாகி விடுகிறது. அங்கே ஒரு தொழிற்சாலையை அமைத்தால் முழுமையாக அந்தத் தொழிற்சாலை இயங்கும் அளவுக்கு உற்பத்தி இராது என்ற அடிப்படையில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக அறிந்தேன்.

1989 அக்டோபர் 31]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மீண்டும் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மாம்பழம் உற்பத்தி எங்கெங்கே அதிகமாக இருக்கிறது என்ற விவரத்தை அரசு தயார் செய்துள்ளதா? இப்படிப்பட்ட பகுதிகளில் ஒன்றான தருமபுரி மாவட்டத்தில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மாம்பழம் எங்கெங்கே உற்பத்தியாகிறது என்று ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த செய்தி தான். தருமபுரியில் இப்படிப்பட்டத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

திரு. டி. கே. பழனிச்சாமி: தலைவரவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் அடங்கிய மாதவரம் பால் பண்ணையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் மாம்பழம் உற்பத்தியாகிறது. அதை அந்தப் பால்பண்ணை அதிகாரிகள் ஏலத்தில் விட்டு, தனியார்கள் கொள்ளையடித்து வருகிறார்கள். அங்கே நிலம் நிறைய காலியாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழம் உற்பத்தியாகிற இடங்களில் எல்லாம் தொழிற்சாலை அமைத்துவிட்டால், பொது மக்களுடைய உபயோகத்திற்கு மாம்பழம் போய்ச் சேராது. ஆகவே, அது பொதுமக்களுடைய உபயோகத்திற்கு இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

ஆதி திராவிடர்களுக்குப் பதவி உயர்வு.

* 3447. **திரு. வீ. பெ. துரைசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மருத்துவத்துறை இயக்குநர், மருத்துவ மற்றும் சுகாதாரத்துறை இயக்குநர் போன்ற பதவிகளில் இதுவரை